OS.No.11/2024 (89/2015)
Date: 26.02.2026
DW–1 சுகுமாரன், த/பெ. ஆறுமுகம்.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

கொடியானுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைத்தான் வட்டனும், வனத்தானும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். வட்டன் தன்னுடைய பிரியப்பட்டாத பாகத்தை வீராசாமிக்கு பொதுவில் பாதி என்று கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். வனத்தான் அவரது பிள்ளைகளான மயில், பூங்கான், கண்ணன் ஆகியோருடன் கூட்டாக அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி மயில், பூங்கான், கண்ணன் ஆகிய மூவரும் 28.04.2004 ம் தேதியிட்ட பதிவுசெய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலமாக இந்த தாவா சொத்தானது பூங்கான் என்பவருக்கு பி அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பூங்கான் எனக்கு எதிராக எதற்காக வழக்கு போட்டார் என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால் 27 செண்ட்டிற்காக எனக்கு எதிராக வழக்குப் போட்டுள்ளார். பூங்கான் எனக்கு எதிராக போட்ட வழக்குப் பற்றி எனக்கு தெரியாதா என்றால் தெரியும். பூங்கான் நான் சொல்வது போல் 27 செண்டிற்கு மட்டும் வழக்குப்போடவில்லை மொத்தம் 12 அயிட்ட சொத்திற்கு வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்றால் மற்ற அயிட்ட சொத்துக்களைப் பற்றி எனக்கு தெரியாது. நான் யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் கொடியான் மகன் ரங்கநாதன் என்பரிடம் இருந்து கிரையம் பெற்றேன். கொடியான் மகன் ரங்கநாதன் என்பவர் 30.10.2009 ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலமாக மாரிமுத்து அம்மாள் என்பவரிடம் இருந்து V.K.ரங்கநாதன் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி மாரிமுத்து எனது தாயார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்தில் வழக்குச் சொத்தின் அனைத்து சர்வே எண்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்தில் சர்வே எண். 208/14–54 ல் தென்புறம் பாதி 27 ல் 26 போக 0.01 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 26 செண்ட்டில் 10 செண்ட்டு ராமசாமிக்கும், 10 செண்ட்டு சன்னியாசிக்கும், 6 செண்ட்டு ஏழுமலை ஆகியோருக்கு கிரையம் கொடுக்கப்பட்டு

அவரவர் தனி அனுபவம் பெற்று வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி ராமசாமி என்பவர் அம்பிகா என்பவருக்கு 10 செண்ட்டை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 13.05.2005ம் தேதியிட்ட கிரையப்பத்திரமான பி.சா.ஆ.4 முன்னிலைக்கு 6ம் பிரதிவாதியான மாரிமுத்தான எனது தாயார் வீராசாமி மற்றும் சேகர் ஆகியோரிடமிருந்து வழக்குச் சொத்தின் அனைத்து சர்வே எண்ணிலுள்ள சொத்துக்களையும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.4 கிரையப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள அனைத்து சர்வே எண் சொத்துக்களில் உள்ள விஸ்தீரணத்தில் தென்புறம் பாதி கிரையம் பெற்றுள்ளதாகத்தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.4ல் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு சர்வே எண்ணுக்கும் அதன் நான்கு எல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.4–ல் காட்டப்பட்டுள்ள 12 அயிட்டங்களில் 8வது அயிட்டமான சர்வே எண்.208/14–ல் 0.54ல் பாதி 0.27ல் 0.26 போக 0.01 செண்ட் நிலம் தான் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 12 அயிட்டங்கள் சொத்தைத்தான் ரங்கநாதன் மாரிமுத்தம்மாளிடம் இருந்த கிரையம் பெற்று அதன் பின்னர் மேற்படி ரங்கநாதனிடம் இருந்து 12.03.2012ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் பி.சா.ஆ.5 மூலமாக ஒரே அயிட்ட சொத்துக்களான 208/14–ல் 0.54ல் பாதி 0.27 செண்ட் நான் கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எனது தாயார் மாரிமுத்தம்மாள் பி.சா.ஆ.4ன் மூலமாக சர்வே எண்.208/14–ல் 0.54ல் பாதி 0.27ல் 0.26 போக 0.01 செண்ட் நிலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதேபோல மேற்படி ரங்கநாதனும் மாரிமுத்தம்மாளிடம் இருந்து சர்வே எண்.208/14–ல் 0.54ல் பாதி 0.27ல் 0.26 போக 0.01 செண்ட் நிலத்தை தான் வா.சா.ஆ.7ன் மூலமாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ரங்கநாதனே எனது தாயாரிடம் இருந்து ஒரு செண்ட்டை தான் பெற்றுள்ளார் இந்நிலையில் ரங்கநாதன் எனக்கு 27 செண்ட்டை விற்பதற்கு அவருக்கு உரிமை இல்லை என்றால் வீராசாமியிடம் இருந்து ரங்கநாதன் மேற்படி 27 செண்ட்டை வாங்கித்தான் எனக்கு விற்பனை செய்தார். எந்த தேதியில் வீராசாமியிடம் இருந்து ரங்கநாதன் மற்ற சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. பி.சா.ஆ.1 ன் மூலமாக வட்டனே வீராசாமிக்கு 208/14ல் 27 செண்ட்டை தான் விற்பனை செய்கிறார் என்றால் சரியல்ல. 2004ம் ஆண்டே வனத்தானுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை வாதிகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட

நிலையில் ரங்கநாதன், மாரிமுத்து, சுகுமார் தவறான ஆவணங்களை பின்னிட்டு ஏற்படுத்திக்கொண்டு வாதியின் அமைதியான தாவா சொத்தின் அனுபவத்தை தொந்தரவு செய்துவருகிறோம் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி கோபால் கிராம நிர்வாக அலுவலர் என்பதால் வேண்டும் என்றே வருவாய்துறை ஆவணங்களில் எந்தவொரு விசாரணையையும் மேற்கொள்ளாமல் மாற்றிக்கொண்டோம் என்றால் சரியல்ல. வாதிகள் தான் இதுநாள் வரை 2004ம் ஆண்டில் இருந்து பூங்கான் அவரைப் பின்தொடர்ந்து அவரது வாரிசுகளான 2 முதல் 8 வாதிகள் தான் தாவாசொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி வட்டன் சொத்தை வீராசாமிக்கு கொடுக்கும் போது எந்தவொரு நான்கு எல்லைகளும் குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி மாரிமுத்ததம்மாள், ரங்கநாதன் ஆகிய இருவருமே கிரையம் பெறும் போது எந்தவொரு நான்கு எல்லைகளும் குறிப்பிட்டு வாங்கவில்லை என்றால் சரிதான். இதுநாள் வரையில் வழக்குச் சொத்தில் வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் அதை தடைசெய்ய எனக்கு எந்தவொரு உரிமையும் இல்லை என்றாலும் தாவாவில் கண்டுள்ள நிவாரணம் வாதிகளுக்கு கிடைக்கவேண்டியது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(Sd/– M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்